# කාර්ය සාධන වාර්තාව
## செயலாற்றுகை அறிக்கை
## Performance Report
## 2012

රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුව

அரசகரும மொழிகள் திணைக்களம்

Department of Official Languages

# செயலாற்றுகை அறிக்கை

# 2012

## அரசகரும மொழிகள் திணைக்களம்

அரசகரும மொழிகள் திணைக்களம்
"பாஷா மந்திரய",
இல 341/7
கோட்டே வீதி
இராஜகிரிய

# உள்ளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| 01. | செய்திகள் | |
| i. | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளரின் செய்தி | 01 |
| ii. | அரசகரும மொழிகள் ஆணையாளரின் செய்தி | 02 |
| 02. | அறிமுகம் | 03 |
| 03. | தொலைநோக்கு மற்றும் செயற்பணி | 03 |
| 04. | திணைக்களத்தின் நோக்கங்கள் | 04 |
| 05. | திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும் பிரதான பணிகள் | 04 |
| 06. | அமைப்பு முறையிலான கட்டமைப்பு | 04 |
| 07. | அமைப்பு முறையிலான குறிப்பு | 05 |
| 08. | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | 06 |
| 09. | திணைக்களத்தின் பிரதான பணிகள் மற்றும் அதன் செயற்பணிகள் | |
| i. | நிர்வாக பிரிவு | 07-10 |
| ii. | கணக்குகள் பிரிவு | 11 |
| iii. | பரீட்சைப் பிரிவு | 12 |
| iv. | மொழி ஆய்வுகூடம் | 13-14 |
| v. | மொழிபெயர்ப்புப் பிரிவு | 15 |
| vi. | வெளியீடுகள் மற்றும் விற்பனைப் பிரிவு | 16-18 |
| vii. | கலைசொற்றொகுதி பிரிவு | 19 |
| viii. | நூலகம் | 20 |

**10. திணைக்களத்தின் முன்னேற்றம்**

| | | |
|---|---|---|
| 10.1 | செயற்பாட்டுத் திட்டம் - **2012** | 21-26 |
| 10.2 | நிதி செயலாற்றுகை அறிக்கை- **2012** | 27 |
| 10.3 | **2012** ஆம் வருடத்திற்கான முன்னேற்றம் | 28-38 |
| **10.**4 | விசேட நிகழ்ச்சிகளும் விசேட சந்தர்ப்பங்களும் | 39-46 |

**11. எதிர்காலத் திட்டம் - 2013** **47-51**

**12. தொலைபேசி விபரக்கொத்து** **52**

## தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளரின் செய்தி

அரசகரும மொழிக்கொள்கை மற்றும் மும்மொழி பத்தாண்டு கொள்கையை நடைமுறைப்படுத்தும் அரசாங்க வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்காக 2012 ஆம் ஆண்டில் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் சிறந்த பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இரு மொழியில் மற்றும் மும்மொழியில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது மொழிபெயர்ப்பு சேவையின் அத்தியவசியத்தை அறிந்து கொண்டு அரசகரும மொழிகள் திணைக்களம் மூலம், மொழி பெயர்ப்பு சேவையை வழங்குவதை நிறுவனத்தின் பிரதான பணியாக நிறைவேற்றுவதை மிகவும் மதிக்கிறேன். கலைச் சொற்றொகுதிகளை தயாரித்தலும், மும்மொழி அகராதியை தயாரித்தலும், மொழித் தேர்ச்சி பரீட்சைகளை நடாத்தலும் அதற்கு இணையான முக்கியத்துவமான பணிகளாக காண்கிறேன். அவ்வாறு, அரச அலுவலர்களினைப் போன்றே சகல பிரசைகளினதும் மொழித் தேவைகளை நிறைவேற்றும்போது இந்நிகழ்ச்சித் திட்டங்கள் பெரிதும் துணையாயுள்ளன. மேலும் மும்மொழி அகராதி மற்றும் மொழி பெயர்ப்புக் குழுவை இணையத்தளத்தில் பதிதலும் நிறுவனத்தின் மூலம் 2012 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றியாகவும் காலத்தின் தேவை ஒன்றை நிறைவேற்றும் ஒன்றாகவும் காண்கிறேன்.

2013 ஆம் ஆண்டில் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் பணிகளை மிகவும் வினைதிறன் மிக்கதாகவும் பரந்த அளவிலும் நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு திரைசேரி மூலம் ஒதுக்கீடு செய்யப்படும் ஒதுக்கீட்டுத் தொகையை அதிகரித்தலும் நிறுவனம் பெற்றுக்கொண்ட முன்னேற்றமாக கருதுகிறேன். அதற்கேற்ப 2013 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள பாரிய பொறுப்பை நன்றாக புரிந்து கொண்டு மனித வளங்களை அதிகரிப்பதற்கும் அறிவு மற்றும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கிறேன்.

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக பங்களிப்பை வழங்கிய ஆணையாளர் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதோடு 2013 ஆம் ஆண்டில் மிகவும் வெற்றிகரமாக நிறுவனத்தின் செயற்பணிகள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கிறேன்.

எம்.எஸ். விக்கிரமசிங்க
செயலாளர்
தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு

# அரசகரும மொழிகள் ஆணையாளரின் செய்தி

இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் வித்தியாசங்களுக்கு இணையாக அரசகரும மொழிகள் திணைக்களத்தின் பணிகளும் முறையான மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளன. மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமாக நிலவிய இனப்பிரச்சினையின் பெறுபேறான பயங்கர யுத்தத்தின் தீய விளைவை அனைத்து இனங்களும் அனுபவித்திருந்தன. எனவே நிலையான சமாதானமும் இன ஒற்றுமையுமே நாட்டின் தேசிய தேவைகளாய் இருந்தன.

2009 ஆம் இரண்டு மில்லியனுக்கு அண்மித்த மக்களின் இனிய எதிர்கால கனவுகளை நனவாக்கி வெற்றி கொண்ட நாட்டிற்கு நிலையான சமாதானம் மற்றும் பலமிக்க நாளைய தினத்தை உருவாக்குவதற்கு மும்மொழி அறிவை சகல இலங்கையரும் பெற்றிருக்க வேண்டியது தெளிவானது. அதற்கு ஏற்ப 2012 ஆம் ஆண்டை மும்மொழி வருடமாக பிரகடனப்படுத்தியதோடு அதற்காக பத்து வருட வேலைத்திட்டமொன்று 2012.01.21 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குரிய வசதிகள் வழங்கும் நேரடி பொறுப்பை கொண்டுள்ள நிறுவனமாக அரசகரும மொழிகள் திணைக்களம் 2012 ஆம் வருடத்தில் பாரிய பணிகளை நிறைவேற்றியுள்ளது. அச்சந்தர்ப்பத்தில் நல்ல புரிந்துணர்வோடும் மற்றும் உணர்வோடும் செயற்படும் செயல்முறையான அரசியல் தலைமை ஒன்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு கௌரவ அமைச்சரிடம் இருந்து பெறப்பட்டது என்பதை கௌரவத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறே அரசகரும மொழிகள் திணைக்களத்திற்கான பாரதூரமான பணிகளை நிறைவேற்றுவதற்கு அமைச்சின் செயலாளரிடம் பெற்ற வழிகாட்டல்கள் மற்றும் அனுசரணையானது எமது திணைக்களத்திற்கு பெரும் சக்தியாகும்.

விசேடமாக அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ மொழி பெயர்ப்பாளராகவும் அரச ஊழியர்களின் மொழித் தேர்ச்சி மதிப்பீட்டாளராகவும், மொழித் தேர்ச்சியை பெற்றுக்கொள்வதற்கு துணையாகும் பல்வேறு வெளியீடுகள் மற்றும் கைந்நூல்களை தயாரிப்பவராகவும், புதிய தொழிநுட்ப முறையூடாக பாடப்பரப்பை அபிவிருத்தி செய்பவராகவும் 2012 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் பணிகளை, திணைக்கள பணிக்கொள்வோரிடமிருந்து கிடைத்த பாரிய ஒத்துழைப்பின் மூலமே என்னால் நிறைவேற்ற முடிந்தது. அவ்வாறே அவ்வாண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள் மற்றும் அதன் முன்னேற்றத்தை வெளியிடுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமையிட்டு மகிழ்வதோடு, அதை ஒழுங்கு செய்வதற்கு உதவி புரிந்த அபிவிருத்தி பிரிவின் பணிக்குழுவுக்கு எனது விசேட நன்றிகளையும் அனைத்து பணிக்குழுவினருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜே. டி. சீ. ஜயசிங்ஹ

ஆணையாளர் - அரச கரும மொழிகள் திணைக்களம்.

## 02. அறிமுகம்

**1956** ஆம் ஆண்டு **33** ஆம் இலக்கத்தையுடைய அரசகரும மொழிகள் சட்டத்தை செயற்படுத்தும் நிறுவனமாக **1956.10.01** ஆம் திகதி அரசகரும மொழிகள் திணைக்களம் தாபிக்கப்பட்டுள்ளது. **1987 – 13** ஆவது மற்றும் **1988-16** அரசியலமைப்புத் திருத்தத்திற்கேற்ப சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் இலங்கையின் அரசகரும மொழிகளாக்கப்பட்டிருப்பதுடன் ஆங்கில்ம் இணைப்பு மொழியாகப் பெயரிடப்பட்டது. அக்கொள்கைகளைச் செயற்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்கும் பொறுப்பை அரசகரும மொழிகள் திணைக்களம் நிறைவேற்றுகிறது.தற்போது தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் செயற்படும் இத்திணைக்களத்தின் தலைவராக அரசகரும மொழிகள் ஆணையாளர் உள்ளார். இத்திணைக்களம் 'பாஷா மந்திரய', இலக்கம் 341/7, கோட்டே வீதி, இராஜகிரிய என்ற முகவரியில் அமைந்துள்ளது.

## 03. தொலைநோக்கு மற்றும் செயற்பணி:

### தொலைநோக்கு

சமாதானம் மற்றும் அமைதியுடனான மேம்படுத்தப்பட்ட மும்மொழிச் சமுதாயம்.

### செயற்பணி:

சமுக ஒற்றுமையையும் சமாதானத்தையும் நோக்கங்களாகக் கொண்ட அரசகரும மொழிக் கொள்கையை வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்தலும் அவற்றை ஒருங்கிணைத்தலும்.

## 04. குறிக்கோள்கள்:

01.மும்மொழித் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) திறமைகளையும் ஏனைய மொழித் (வெளிநாட்டு) திறமைகளையும் விருத்தி செய்து மாணவர்களிற்கும், உத்தியோகத்தர்களுக்குமான மொழி வசதிகளை வழங்குதல்.

02.அரச நிறுவனங்களின் உத்தியோக பூர்வ மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றுதல்.

03.அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய வசதிகளை வழங்குவதற்கு பல்வேறு பாடங்களுக்காக கலைச் சொற்றொகுதியைத் தயாரித்தல்.

## 05. திணைக்களத்தின் பிரதான பணிகள்:

1. அரச நிருவாக சுற்றறிக்கை இல. **03/2007** மற்றும் **07/2007** படி அரச மொழிகளில் தேர்ச்சியை பெற்றுக் கொள்ளவேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மற்றும் வாய் மூல பரீட்சைகளை நடாத்துதல் மற்றம் சான்றிதழ்களை வழங்குதல்.
2. ஆரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் மொழிபெயர்ப்புப பணிகயை நிறைவேற்றுதல்.
3. பல்வேறு பாடங்களுக்கான சிங்களம் - ஆங்கிலம் மற்றும் ஆங்கிலம் - தமிழ் கலைச் சொற்றொகுதிகளைத் தயாரித்தல்.
4. அரச உத்தியோகத்தர்களின் மொழித்தேர்ச்சிப் பரீடசைகளுக்கான பாடநூல்களையும் துணை நூல்களையும் தயாரித்தல்.
5. மும்மொழி அகராதிகளைத் தயாரித்தல்.
6. நவீன தொழிநுட்ப முறைகளைப் பயன்படுத்தி சிங்களம், தமிழ், ஆங்கிலம் மொழிகளைப் போன்றே சர்வதேச மொழிகளையும் மொழி ஆய்வுகூடத்தில் கற்பித்தலும் பரீட்சைகளை நடாத்துதலும்.
7. வெளி நிறுவனங்களின் பணிக்குழுக்களுக்கான மொழித் தேர்ச்சிப் பரீட்சைகள் மற்றும் வினைத் திறன்காண் தடைதாண்டற் பரீட்சைகளை நடாத்துதல்.
8. பல்கலைக்கழகம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் மொழிபெயர்ப்பு பாடநெறிகளைப் பின்பற்றுபவர்களுக்கு செயன்முறைப் பயிற்சியை வழங்குதல்.

## 06. திணைக்களத்தின் கட்டமைப்பு:

திணைக்களத்தின் தன்மைப்படி .

I. நிாவாகப் பிரிவு

II. கணக்குப் பிரிவு

III. பரீட்சைப் பிரிவு

IV. மொழிபெயர்ப்புப் பிரிவு

V. மொழி ஆய்வுகூடம்

VI. வெளியீடுகள் மற்றும் விற்பனைப் பிரிவு

VII. சொற்றொகுதி களஞ்சியப் பிரிவு

VIII. நூலகம்

# 07. பணிக்குழு


அரசகரும மொழிகள் ஆணையாளர்
கணக்காளர்
பிரதி உதவி ஆணையாளர் (நிர்வாகம்)
பிரதி உதவி ஆணையாளர்
பிரதி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி/ பரீட்சை)
நிர்வாக உத்தியோகத்தர்
நூலகர்
மொழிபெயர்ப்பு கண்காணிப்பாளர்
பணிப்பாளர் கலைச் சொற்றொகுதி கருத்திட்டம்
மொழி ஆய்வுகூட கண்காணிப் பாளர்
சிற்றூழியர் பணிக்குழு
சிற்றூழியர் பணிக்குழு
சிற்றூழியர் பணிக்குழு
சிற்றூழியர் பணிக்குழு
சிற்றூழியர் பணிக்குழு
சிற்றூழியர் பணிக்குழு

## 08. அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட திணைக்களத்தின் பணிற்குழு பின்வருமாறு

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போது காணப்படும எண்ணிக்கை | **2012.12.31** அன்ற உள்ளவாறான வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| அரசகரும மொழிகள் ஆணையாளர் | **01** | **01** | **-** |
| பிரதி ஆணையாளர்/ உதவி ஆணையாளர் | **03** | **02** | **01** |
| கணக்காளர் | **01** | **-** | **01** |
| நிர்வாக அலுவலர் | **01** | **01** | **-** |
| மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் | **03** | **-** | **03** |
| மொழி ஆய்வுகூட கண்காணிப்பாளர் | **01** | **-** | **01** |
| மொழிபெயர்ப்பாளர் | **15** | **06** | **09** |
| மொழிபெயர்ப்பு உதவியாளர் | **79** | **79** | **-** |
| கருத்திட்ட அபிவிருத்தி உதவியாளர் | **20** | **18** | **02** |
| நூலகர் | **01** | **01** | **-** |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | **16** | **14** | **02** |
| மொழி ஆய்வுகூட உதவியாளர் | **01** | **01** | **-** |
| கனணித் தரவு பதியுநர். | **01** | **01** | **-** |
| அலுவலக உதவியாளர் சேவை | **10** | **08** | **02** |
| சாரதி | **02** | **02** | **-** |

## 09. திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் மற்றும் அதன் பணிகள்.

### I. நிர்வாகப் பிரிவு:

திணைக்களத்தின் செயற்திறனை வளர்ப்பதற்கான திட்டமிடல்களை வழங்குதல் மற்றும் செயற்படுத்துவதன் மூலம் திணைக்களத்தின் மனித மற்றும் பௌதீக வளங்களை செயற்திறனோடு செயற்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் திணைக்களத்தின் கணனி முறைமையைப் பராமரித்தல் மற்றும் இணையம் மற்றும் வலையமைப்பை அண்டிய நவடிக்கைகளைத் தொழிற்படுத்தலும் இப்பரிவின் மூலம் நிறைவேற்றப்படும் பிரதான பணிகளாகும்.

**2012 ஆம் ஆண்டின் நடவடிக்கைகள்.**

i. அரச நிர்வாக சுற்றறிக்கை 6/2006 இன் பிரகாரம் திருத்தப்பட்ட பின்வரும் நான்கு திணைக்களப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு ஒழுங்கு முறைகள் அரசசேவை ஆணைக்குழுவின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

- மொழிபெயர்ப்பு கண்காணிப்பாளர்.
- மொழி ஆய்வுகூட கண்காணிப்பாளர்.
- மொழிபெயர்ப்பாளர்.
- மொழி ஆய்வுகூட உதவியாளர்.

இப்பதவிகளிடையே மொழிபெயர்பபு கண்காணிப்பாளர், மொழி ஆய்வுகூட கண்காணிப்பாளர்., மொழிபெயர்ப்பாளர், பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் ஒழுங்கு முறைகளுக்கு அரசசேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற முடிந்தது.

ii. அரசாங்கத்தின் கொள்கையின் மீது பட்டதாரிப் பயிலுநர் திட்டத்தின் கீழ் மாவட்ட மட்டத்தில் திணைக்களத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 54 பட்டதாரிப் பயிலுநர்கள் பின்வரும் துறைகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டது.

- மொழிபெயர்ப்பு (சிங்களம்/ ஆங்கிலம்), (சிங்களம்/ தமிழ்).
- மொழித்தேர்ச்சிப் பரீட்சை ஒருங்கிணைப்பு.
- மொழி ஆய்வுகூடத்தின் மொழிவகுப்பு ஒருங்கிணைப்பு.
- நிர்வாகம்/ கணக்கு மற்றும் அபிவிருத்தி அலுவல்கள்.
- தகவல் தொழிநுட்ப அலுவல்கள்.

iii. 93 அபிவிருத்தி அலுவலர்கள் பதவிகளை உருவாக்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நி.ஒ. 71 முன் வைக்கப்பட்டுள்ளது.

iv. முகாமைத்துவ மறுசீரமைப்பு மன்றங்கள்.

அரச முகாமைத்தவ மறுசீரமைப்பு அமைச்சின் வழிகாட்டுதல் மூலம் பணிகள் மற்றும் நடைமுறைகள் சாராம்சத்திற்காக முகாமைத்துவ மறுசீரமைப்பு மன்றங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

அதன்கீழ் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆலோசகர் எஸ். மனம்பேரி அவர்களால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம்,

முறைவிதிகள் மற்றும் நடைமுறைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள் உயர்ந்த பண்புடன் மற்றும் நடைமுறைகள் அபிவிருத்தி செய்வதன் மூலம் வழங்கப்படும் சேவைகள் உயர்ந்த பண்புடன் வெற்றி பெறச் செய்வதற்கும், அதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு கலைச் சொற்றொகுதிகள் தயாரிப்பை நிரந்தர பணியாக்குதற்குவதற்கும் மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு நிலையத்தை தாபித்தலும், தகவல் தொழிநுட்பத்தை விருத்தி செய்வதற்கும் அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் தொடர்பான ஆராய்ச்சிகள் திட்டமிடல் மற்றும் கருத்திட்டப் பணிகளைச் செயற்படுத்துவதற்கு கீழ்வரும் பதவிகள் செயற்பட்டு வருகின்றன.

- உதவி ஆணையாளர் (தொழிநுட்பம்) – 01
- கலைச் சொல் நிபுணர் – 06
- இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவை உத்தியோகத்தர் தரம் I- 02 உரைபெயர்ப்பு (சிங்களம்/ ஆங்கிலம்) (சிங்களம்/ தமிழ்) (தமிழ்/ ஆங்கிலம்)

V. பல வருடங்களாக வெற்றிடங்கள் நிலவிய நிர்வாக உத்தியோகத்தர் பதவி நிரப்பப்பட்டமை இவ்வருடத்தில் இடம்பெற்ற விசேட சம்பவமாகும்.

VI. உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டம் தேசிய உற்பத்தித்திறன் விருது 2010/114 போட்டித் தொடருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதோடு அதன் தரப்படுத்தலின் பிரகாரம் E தரத்திலான நிறுவனமாக தரப்படுத்தப்பட்டுள்ளது.

VII. சொற்றொகுதி தயாரிப்பு கருத்திட்டத்திற்கு பின்வருமாறு கருத்திட்டப் பணிப்பாளர்கள் மற்றும் கணனி இயக்குநர்கள் வருட காலத்தினுள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

சிங்களம்/ ஆங்கிலம் சொற்றொகுதிப் பிரிவு – பணிப்பாளர் – 01

கனணி இயக்குநர்கள் - 02

தமிழ்/ ஆங்கிலம் சொற்றொகுதிப் பிரிவு – பணிப்பாளர் – 01

கனணி இயக்குநர்கள் - 02

VIII. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை பங்கு பெறச்செய்வதனால் அவ்வுத்தியோகத்தர்களின் வினைத்திறன் உயர்வடைவதற்கு அது பெரிதும் துணையானது.

- அரச நிறுவனங்களின் கணக்காய்வு பிரச்சனைகளைக் குறைத்தல்.
- பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டம்.
- இலங்கை கணக்கீட்டு தரத்திற்குப் பதிலாக இலங்கை நிதி அறிக்கைத் தரத்தை நடைமுறைப்படுத்தல்.
- விஞ்ஞான ரீதியான சிக்கனமான மற்றும் பாதுகாப்பாக வாகனத்தை செலுத்துதல்.
- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவை ஆரம்பப் பயிற்சி.
- ஆவண முகாமைத்துவம்.
- கனணி பாடநெறிகள்.
- ஆவணப்படுத்தல் ஆற்றல்களை விருத்தி செய்தல்.
- தொலைபேசி இயக்குநர்களின் ஆற்றல்களை விருத்தி செய்தல்.
- சாரதிகளுக்கான செயன்முறைப் பயிற்சி.
- களஞ்சியப்படுத்தலும் விலைமனுக்கோரல் செயற்பாடுகள்.
- Kizen Management
- Eassence of Public Procurement
- சிற்றூழியர் சேவையை விருத்தி செய்தல்.
- திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அலுவலக முறைகள், தாபண விதிக்கோவை, நிதிமுறைகள் மற்றும் சம்பளத்தைத் தயாரித்தல் மற்றும் மொழிபெயர்ப்பு தொடர்பான பயிற்சி நெறிகளை நடைமுறைப்படுத்தல்.

IX. உரைபெயர்ப்புக் குழுவை அமைத்தல். அக்குழுவை இணையத்தில் வெளியிடுதல், மற்றும் சத்தியப்பிரமாணம் செய்த மொழி பெயர்ப்பாளர்களின் பெயர்களை இணையத்தளத்தில் வெளியிடல் முதலான விசேட பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

X. பாவனையிலிருந்து விலக்கப்பட்டடிருந்த 16 – 1179 வான் வண்டியை விலைமனுக் கோரி விற்றல் மற்றும் நிதிக் குத்தகை முறையின் கீழ் NB 3466 வான் வண்டியைப் புதிதாகப் பெறுவதற்கு நடடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

XI.திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களினதும் சுயவிபரக் கோவைகள் நாளகப்படுத்தப்பட்டுள்ளன.

xii. 2012 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள்

| திகதி | விடயம் | காசோலை இல. | தோகை ரூபா | சதம் |
|---|---|---|---|---|
| 2012.07.27 | அரசகரும மொழிகள் திணைக்களத்திற்கு வர்ணம் பூசுதல். | 301042 | 4,70,162 | |
| 2012.12.26 | அரசகரும மொழிகள் திணைக்களத்திற்கு வர்ணம் பூசுதல். | 220395 | 9,40,324 | |
| 2012.12.31 | அரசகரும மொழிகள் திணைக்களத்திற்கு வர்ணம் பூசுதல். | 301057 | 47,218 | |
| | | | 14,57.704 | 00 |
| 2012.03.13 | மலசலகூடங்களின் கழிவுகளை அகற்றுதல். | | 8,725 | 00 |
| 2012.05.14 | கதவுகளில் சாவிகளைப் பொருத்துதல். | | 1000 | 00 |
| 2012.05.17 | திணைக்களத்திற்கான நீர்க்கழாய்கள் கொள்வனவு செய்தல். | | 1200 | 00 |
| 2012.06.13 | திணைக்களக் கட்டிடத்தின் மின்சாரவேலை தொடர்பான பராமரிப்பு நடவடிக்கைகள். | | 2000 | 00 |
| 2012.12.12 | நிர்வாகப் பிரிவுக்கு உபகரணங்களைக் கொள்வணவு செய்தல். | 301041 | 3,998 | 40 |
| 2012.12.26 | மலசலகூடங்களைத் திருத்துதல். | 256347 | 128241 | 63 |
| | | | 145165 | 03 |

xiii. அபிவிருத்திப் பிரிவின் கீழ் 2012 ஆம் ஆண்டு பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- மாதாந்த எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களை குறித்த திகதியில் அமைச்சுக்குச் சர்ப்பித்தல்.
- மாதாந்த, காலாண்டு, மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகள் குறித்த காலத்திற்குள் அமைச்சுக்கு மற்றும் குறித்த ஏனைய நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.
- வருடாந்த செயன்முறைத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் முன்வைத்தல்.
- அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் கூட்ட அறிக்கையைப் பேணுதல்.
- புத்தகக் களஞ்சியத்தின் நடவடிக்கைகளைப் பேணுதல்.

## II. கணக்குப் பிரிவு

திணைக்களத்தின் அனைத்து நிதி நடவடிக்கைகளையும் மற்றும் விலை மனுக்கோரல் நடவடிக்கைகளையும் நிறைவேற்றுதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிநறது. திணைக்களத்திற்காக ஒதுக்கப்படும் வருடார்ந்த மதீப்பீட்டு ஒதுக்கீடுகளின் கீழ் சாதாரண நிர்வாகத்திற்குரிய சம்பளக் கொடுப்பனவு முதலான பணிகளுக்கு ஒதுக்கீட்டை செலவு செய்தலும் திணைக்களத்தின் கருத்திட்டங்களுக்கு உரிய விலைமனுக் கோரல் நடவடிக்கைகளும் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. மிகச் சிறந்த நிதி முகாமைத்துவத்துடன் மேற்குறித்த பணிகளை நிறைவேற்றுவதோடு அது தொடர்பாக திறைசேரிக்கும் உரிய ஏனைய நிறுவனங்களுக்கும் அறிக்கையிடல் மற்றும் முன்னேற்றத்தை சமர்ப்பித்தலும் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே களஞ்சியம் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் வருடார்ந்த பொருட்கள் ஆய்வு நடவடிக்கைகளும் வருடத்தினுள் நிறைவேற்றப்படுகின்றன.

**வருடத்திற்கான ஒதுக்கீடுகள் - 2012**

| குறி இலக்கம் | விடயம் | மொத்த வழங்கள் |
|---|---|---|
| 236-1-1-0-1001 | சம்பளமும் நாட்கூலியும் | 36605000.00 |
| 236-1-1-0-1002 | மேலதிக நேரக் கொடுப்பனவும் விடுமுறைக் கொடுப்பனவும் | 500000.00 |
| 236-1-1-0-1003 | ஏனைய கொடுப்பனவுகள் | 13895000.00 |
| | பிரத்தியேக கொடுப்பனவுகள் | 51000000.00 |
| 236-1-1-0-1101 | போக்குவரத்து செலவீனங்கள் - உள்நாடு | 196000.00 |
| 236-1-1-0-1102 | போக்குவரத்து செலவீனங்கள் - வெளிநாடு | 403000.00 |
| 236-1-1-0-1201 | எழுத்து உபகரணங்களும் அலுவலக தேவைகளும் | 980000.00 |
| 236-1-1-0-1202 | எரிபொருள் | 490000.00 |
| 236-1-1-0-1203 | உணவு மற்றும் சீருடைகள் | 49000.00 |
| 236-1-1-0-1301 | வாகன பராமறிப்பு | 212000.00 |
| 236-1-1-0-1302 | இயந்திரங்கள் மற்றும் உபகரண பராமரிப்பு | 147000.00 |
| 236-1-1-0-1303 | குட்டடங்கள் மற்றும் கட்டமைப்பு பராமரிப்பு | 2470000.00 |
| 236-1-1-0-1402 | தபால் மற்றும் தொடர்பாடற் சேவைகள் | 784000.00 |
| 236-1-1-0-1403 | நீர் மற்றும் மின் வசதி | 1862000.00 |
| 236-1-1-0-1404 | குத்தகை மற்றும் தேசிய வரிகள் | 490000.00 |
| 236-1-1-0-1405 | ஏனையவை | 3450000.00 |
| 236-1-1-0-1506 | அரச ஊழியர்களுக்கான சொத்துக் கடன்களின் வட்டிகள் | 1345000.00 |
| | பல்வேறு மீண்டெழும் | 12666000.00 |
| | மொத்த மீண்டெழும் | 63666000.00 |
| 236-1-1-0-2001 | கட்டட புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | 455000.00 |
| 236-1-1-0-2002 | இயந்திர உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | 182000.00 |
| 236-1-1-0-2003 | வாகன புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | 182000.00 |
| 236-1-1-0-2102 | வீட்டு உபகரணப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைப் பெறல் | 910000.00 |
| 236-1-1-0-2103 | இயந்திரங்களைப் பெற்றுக் கொள்ளல் | 182000.00 |
| 236-1-1-0-2401 | மனித வளங்கள் அபிவிருத்தி | 91000.00 |
| 236-1-1-0-2502 | வளங்கள் அபிவிருத்தி | 11183000.00 |
| | மொத்த மூலதனம் | 13185000.00 |
| | மொத்தப் பெறுமதி | 76851000.00 |
| 134-2-3-3-2502 | பாடப்புத்தக அச்சீடு | 4991360.00 |
| 134-2-3-1-2502 | மொழிபெயர்ப்புப் பயிற்சி | 131000.00 |

## III. பரீட்சைப் பகுதி

அரச உத்தியோகத்தர்களுக்கான நாடாலாவிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளை நடாத்துவது இப்பகுதியினால் மேற்கொள்ளப்படும் பிரதான பணியாகும்.

**2012 ஆம் ஆண்டின் செயற்பாடுகள்.**

அரசாங்க உத்தியோகத்தர்களின் மொழி ஆற்றலை மதிப்பிடுதல் மற்றும் மும்மொழித் தேர்ச்சியை பெற்றுக்கொளவதற்காக ஊக்குவிப்புச் செய்வதை நோக்கமாகக் கொண்டு பரீட்சைகளை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் அதற்கு ஏற்ப பரீட்சைப் பிரிவினால் 2012 அம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு:

i. 2011.05.28 ஆந் திகதி வாய் மொழிப் பரீட்சைக்கு தோற்ற முடியாத அல்லது அதற்கு முன்னரான வருடங்களில் வாய் மொழிப் பரீட்சைகளுக்கு தோற்ற முடியாத அல்லது சித்தி பெறாத அல்லது 2205 உத்தியோகத்தர்களுக்கு 2012.01.22 ஆந் திகதி வாய் மொழிப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டது.

ii. 2011.10.29 ஆந் திகதி நடைபெற்ற எழுத்துப் பரீட்சையில் (I, II மட்டம்) சித்தியடைந்த அரச ஊழியர்கள் 1574 பேருக்கான வாய்மொழிப் பரீட்சை 2012.09.24 ஆந் திகதி முதல் 2012.09.27 வரை நடாத்தப்பட்டது.

iii. சிங்களம்/ தமிழ் மட்டம் - III இல் சிதிதியடைந்த உத்தியோகத்தர்கள் 8446 பேருக்கான 2012.11.03 ஆந் திகதி முதல் 2012.11.30 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்பட்டது.

iv. 3141 சான்றிதழ்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

v. சமூக ஒருமைப்பாட்டு வாரத்திற்காக தென் (510) மற்றும் சப்ரகமுவ (361) மாகாணங்களில் 871 சான்றிதழ்கள் வைபவரீதியாக வழங்கப்பட்டுள்ளன.

vi. அம்பாறை மாவட்டத்தில் 481 பேருக்கு 2012.10.23 ஆந் திகதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

vii. மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் 1484 சான்றிதழ்கள் தேசத்திற்கு மகுடம் இணையான நிகழ்ச்சித் திட்டங்ளின் கீழ் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டடுள்ளது.

viii. மொழி ஆற்றலை மதிப்பிடுதல் மற்றும் வினைதிறன் தடைதாண்டற் பரீட்சை நடாத்துதல் மூலம் பூர்த்தி செய்ய வேண்டிய தொழில் அறிவு தொடர்பான மதிப்பீடொன்றை வழங்குவதை நோக்காக் கொண்டு வெளி நிறுவனங்களின் வேண்டுகோளின் படி பரீட்சைகளை நடாத்துதல். இங்கு 8 நிறுவனங்களுக்கு பரீட்சைகள் நடாத்தப்பட்டதோடு, 1001 பேர் பங்குபற்றினார்கள்.

## IV. மொழி ஆய்வுகூடம்.

அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் உள்நாட்டு மற்றும் ளெிநாட்டு மொழி வகுப்புகளை ஒருங்கிணைப்புச் செய்தல் இப்ரிவினால் செய்யப்படும் பிரதான பணியாகும்.

**2012 ஆம் அண்டின் செயற்பாடுகள்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மொழிகள் தொடர்பான திறமையை வளர்த்தல். இனங்களுக்கிடையே மொழி ரீதியான தடைகளை அகற்றல் மூலம் ஒற்றுமை மற்றும் சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு 2012 ஆம் ஆண்டிற்குள் மொழி ஆய்வுகூடத்தின் ஊடாக பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

i. 2012 முதலாம் அரையாண்டில் 482 மாணவர்களுக்கு 2012.01.09 ஆம் திகதியிலிருந்து மொழிப் பாடறெிகளை ஆரம்பித்தல்.

ii. மொழி ஆய்வுகூடத்தின் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவடைந்து மொழிக் கற்றல் உபகரணங்களின் பயன்பாடு மற்றும் மொழி ஆய்வுகூடத்தின் செயற்பாடுகள் தொடர்பான வேலைத் திட்டம் ஒன்றை 2012.01.25 ஆந் திகதி நடாத்தியமை.

iii. 2012 முதலாம் அரையாண்டில் வெற்றிடமாயிருந்த மூன்று மொழி பயிற்றுநர்கள் 2012.01.10 ஆம் திகதியில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

iv. 2012 மொழிப் பாடநெறிகளின் பாடவிதானம் மற்றும் மொழிப் பாடநெறிகளைக் கற்பிக்கும் போது ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக ஆலோசகர்களோடு கலந்துரையாடல் நடாத்தியமை.

v. தொலைக் கல்வி முறை தொடர்பாக மொபிடெல் நிறுவனத்துடன் அடிப்படைக் கலந்துரையாடல் ஒன்றை 2012.01.30 அன்று நடாத்தப்பட்டது.

vi. 2012 தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் மொழி ஆய்வுகூடத்தின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக மொழி ஆய்வுகூட படிவத்தின் மூலம் பொது மக்களை அறிவுறுத்தல் செய்யப்பட்டமை.

vii. 2011 ஆம் ஆண்டில் மொழிப் பாடநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு கௌரவ அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அவர்களின் தலைமையில் 2012.03.19 ஆம் திகதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

viii. நவீன தொழிநுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி நவீன மயப்படுத்தப்பட்ட மொழி ஆய்வுகூடத்தை 2012.03.19 ஆம் திகதி மீண்டும் திறக்ககப்பட்டது.

ix. மொழி ஆய்வுகூடத்தின் செயன்முறை முக்கியத்துவம் மற்றும் கற்பிக்கும் நடைமுறை தொடர்பான ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை 2012.03.19 ஆந் திகதி 15 ஆலோசகர்களின் பங்குபற்றுதலூடாக நடாத்தப்பட்டமை.

x. தொலைக் கல்வி முறைமைக்குரிய அடிப்படைப் பாடங்களை தயாரித்தல் மற்றும் அதன் எதிர்கால நடவடிக்கைகளைய ஏற்பாடு செய்வது தொடர்பாக மொபிடெல் நிறுவனத்துடன் கலந்துரையாடல்.

xi. 2012 அரையாண்டின் மொழிப் பாடநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கானஇறுதி வாய்மொழிமூல மற்றும் எழுத்துப் பரீட்சைகளை நடாத்துதலும் பெறுபேறுகளை வெளியிடலும்.

xii. மொழிப் பாடநெறிகளில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்குரிய பாடப்பரப்பை நவீனப்படுத்தலுக்காக பாடத்துறைசார் ஆலோசகர்களுடன் கலந்துரையாடலை நடாத்தியமை.

xiii. 2012 இரண்டாம் அரையாண்டு மொழிப்பாட நெறிகளில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் அதற்குரிய தீர்வுகள் தொடர்பாக ஆலோசகர்களுடன் 2012.10.02 ஆந் திகதி உரையாடலை நடாத்தியமை.

xiv. 2012 முலாம் அரையாண்டின் மொழிப் பாடநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்த 887 மாணவர்களுக்கு 2012.10.20 ஆந் திகதி வைபவரீதியாக சான்றிதழ்களை வழங்கப்பட்டமை.

xv. 2013 முதலாம் அரையாண்டுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குரிய பத்திரிகை விளம்பரத்தை பிரசுரித்தல்.

xvi. இரண்டாம் அரையாண்டில் தமிழ் மொழியைப் பயின்ற மாணவர்களுக்கு கருத்தரங்குகளை நடாத்துதல்.

xvii. 2012 இரண்டாம் அரையாண்டில் மொழிப் பாடநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை நடாத்துதலும் பெறுபேறுகளை வெளியிடுதலும்.

xviii. பத்திரிகை விளம்பரம் மூலம் 2013 ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டுக்குரிய மாணவர்களைப் பதிவு செய்தல்.

## V. மொழிபெயர்ப்புப் பிரிவு

அரசாங்க உத்தியோக பூர்வ மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுதலானது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் பிரதான பணியாகும்.

### 2012 ஆம் ஆண்டின் செயற்பாடுகள்

நாட்டின் எந்தவொரு பிரதேசத்திற்கும் தேவையான மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு மொழிபெயர்ப்பு சேவைகளை வழங்குதலை நோக்கமாகக் கொண்டு 2012 ஆம் ஆண்டு பின்வரும் பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

i. மொழிபெயர்ப்புக் குழுவை நாளகப்படுத்தல் மற்றும் அதன் தகவல்களை இணையத்தளத்தில் பதிதல்.

ii. உரைபெயர்ப்புக் குழுவைத் தாபித்தல். இக்குழுவிற்குத் தெரிவு செய்யப்பட்ட 109 பேர்களில் 40 பேரின் விபரங்கள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (குறுகிய பயிற்சியொன்றின் பின்னர் எஞ்சியோரின் விபரங்களும் இணையத்தளத்தில் வெளியிட தீர்மானிககப்பட்டுள்ளது)

iii. மொழிபெயர்ப்புப் பிரிவைத் தாபித்தல். தேசிய மொழிகள் கருத்திட்டத்தின் அனுசரணையின் கீழ் மொழிபெயர்ப்புப் பிரிவைத் தாபிப்பதற்கான ஆரம்ப நடடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

iv. மொழிபெயர்ப்புக்காக பட்டதாரிப் பயிலுநர்களை பயிற்றுவித்தல். சிங்களம்/ தமிழ் மற்றும் தமிழ்/ ஆங்கில மொழிபெயர்ப்பு அலுவலர்களுக்கு மொழித்தேர்ச்சியுடனான 30 பட்டதாரிப் பயிலுநர்களை கண்டறிந்ததோடு சிங்களம்/ தமிழ் மொழிபெயர்ப்புத் தொடர்பாக 1 ½ மாத குறுகிய கால பயிற்சியொன்று வழங்கப்பட்டது.

## VI. வெளியீடுகள் மற்றும் விற்பனைப் பிரிவு

அரச உத்தியோகத்தர்கள் உட்பட மொழியைக் கற்போர்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்கள், மொழிப் பயிற்சிப் புத்தகங்களை தயாரித்தல் மற்றும் அச்சிட்டு விற்பனை செய்தலானது இப்பிரிவின் பிரதான பணியாகும்.

**2012 ஆம் ஆண்டின் செயற்பாடுகள்:**

i. புத்தகங்களில் விசேடமாக தமிழ் மற்றும் சிங்கள மொழிகளைக் கற்பதற்கு துணைபுரியும் 5000 எமுத்துத் தமிழ் புத்தகங்கள் மற்றும் 4,900 பேச்சுத் தமிழ் புத்தகங்களை அச்சிட்டு வழங்கலும், 3000 பேச்சுச் சிங்களப் புத்தகங்கள் அச்சிட்டு அவற்றுள் 274 புத்தகங்கள் விற்பனை செய்தலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆண்டிற்குள் புத்தக விற்பனை மூலம் ரூபா. 46,45,170.00 அரசுக்கு வரவு வைக்கப்பட்டது.

ii. மும்மொழியைக் கற்போருக்க பெரிதும் பயன்படக் கூடியதும் இலகுவாகப் பயன்படுத்தக் கூடியவாறும் மும்மொழி அகராதியைத் தயாரித்தல் மற்றும் அச்சிடலானது வெளியீடுகள் மற்றும் விற்பனைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் கீழ் சிங்களக் கலைச் சொற்களுடனான 26,000 சொற்களைக் கொண்ட மும்மொழி அகராதியின் முதற் பிரதி 2012.03.21 ஆம் திகதி மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களிடம் கையளிக்கப்பட்டது. FLICT நிறுவனத்தின் அனுசரணையுடன் அவ் அகராதி 2012.07.16 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களின் கைகளினால் அலரி மாளிகையில் இணையத்தில் பதியப்பட்டது. இதன் இரண்டாவது கட்டமாக தமிழ் கலைச் சொற்களுடனான 30,000 சொற்களைக் கொண்ட அகராதி உச்சரிப்பு மற்றும் உரிய இடங்களில் சித்திரங்கள் மூலம் முறையான அகராதியாக இணையத்தில் பதியப்பட்டுள்ளது. வெளி நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் எதிர்காலத்தில் அச்சிட எதிர்பார்க்கபபட்டுள்ளது.

| 2012 சனவரி 01 ஆம் திகதியில் இருந்து 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான வெளியீடுகள் மற்றும் விற்பனைப் பிரிவின் வருமானம். | | | | |
|---|---|---|---|---|
| தொ.இல | வெளியீடுகள் | விற்பனை செய்யப்பட்ட எண்ணிக்கை | ஒரு புத்தகத்திக் விலை | பெறுமதி. ரூபா |
| 01 | அடிப்படைச் சிங்களம். | 307 | 25 | 7675 |
| 02 | பேச்சுச் சிங்களம். | 274 | 180 | 49320 |
| 03 | சிங்களம் மூலம் தமிழ். | 1547 | 180 | 278460 |
| 04 | பேச்சுத் தமிழ். | 14060 | 200 | 2812000 |
| 05 | எழுத்துத் தமிழ். | 5007 | 200 | 1001400 |
| 06 | உயர் தமிழ். | 49 | 100 | 4900 |
| 07 | சிங்கள தலைமைச்சொல் அகராதி | 183 | 600 | 109800 |
| 08 | மும்மொழி தமிழ். | 1373 | 150 | 205950 |
| 09 | English for Public Servants | 14 | 100 | 11400 |
| 10 | Practical English | 10 | 150 | 16500 |
| 11 | Practical English Basics. | 258 | 125 | 32250 |
| 12 | Practical English Advanced. | 138 | 350 | 48300 |
| 13 | முகாமைத்துவம் | 181 | 115 | 20815 |
| 14 | அழகியற்கல்வி I | 35 | 75 | 2625 |
| 15 | அழகியற்கல்வி II | 30 | 60 | 1800 |
| 16 | நில அளவையியல். | 43 | 75 | 3225 |
| 17 | சுற்றாடற்கல்வி. | 35 | 150 | 5250 |
| 18 | Linguistics | 59 | 75 | 4405 |
| 19 | Communication Sta. | 69 | 60 | 4140 |
| 20 | Fine Art Music. | 43 | 75 | 3225 |
| 21 | Ecconomics. | 64 | 90 | 5760 |
| 22 | CD | 34 | 250 | 8500 |
| 23 | விலங்கியல் | 27 | 150 | 4050 |
| 24 | தொல்பொருளியல். | 34 | 100 | 3400 |
| | | | | **4645170** |

| 2012 ஆம் ஆண்டுக்குள் புத்தகங்களை அச்சிடுதல். | | | | |
|---|---|---|---|---|
| | **வெளியீடு** | **அளவு** | **தொகை** | **அச்சிட்ட நிறுவனம்** |
| | தொல்பொருளியல் | 1000 | 65296 | சீசரா பிரிண்ட்வே பிரைவேட் லிமிடட், 110, பாமன்கட வீதி, புறக்கோட்டை |
| | சிங்களம் மூலம் தமிழ் | 5000 | 765000 | அரசாங்க அச்சக கூட்டுத்தாபனம், பகாலுவ, பாதுக்க |
| | பேச்சுத் தமிழ் | 5000 | 605000 | தரங்ஜி பிரிண்டர்ஸ், நாவிக்க, இராஜகிரிய |
| | எமுத்துத் தமிழ் | 5000 | 535000 | தரங்ஜி பிரிண்டர்ஸ், நாவிக்க, இராஜகிரிய |
| | நாங்கள் சிங்களம் தமிழ் மொழியைக் கற்போம் | 50000 | 1866000 | சிஸ்டம் பிரைவேட் லிமிடெட், 23/1 , முதலாம் மாலிகாகந்த ஒழுங்கை, கொழும்பு |
| | | 9963 | 1171684.8 | அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு- 08 |
| | | 2980 | 253657.6 | அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு- 08 |
| | மொத்தம் | | **5261602.4** | |

## VII. கலைச்சொல் தொகுப்புப் பிரிவு.

அரச முகாமைத்துவ நடவடிக்கைகளுக்குத் தேவையான கலைச் சொற்றொகுதிகளை மும்மொழிகளில் தயாரித்தல், மொழிபெயர்ப்பாளர்களுக்குத் தேவையான கலைச் சொற் பதங்களை திரட்டுதல் மற்றும் புதிய சொற்களை உருவாக்குதல், தற்போது பாவனையில் இல்லாத சொற்களுக்குப் பதிலாக புதிய சொற்களைத் தயாரித்தல் போன்றன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் பிரதன பணிகளாகும். அவ்வாறே கலைச்சொற்றொகுதி விபரவங்கி ஒன்றை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கலைச்சொல் தொகுப்பு தயாரிப்புப் பிரிவானது இரண்டு பிரிவுகளாகச் செயற்படுகின்றது.

ஆங்கிலம் - சிங்களம் கலைச்சொல் தொகுதிப் பிரிவு

ஆங்கிலம் - தமிழ் கலைச் சொற்றொகுதிப் பிரிவு

**2012 ஆம் ஆண்டின் செயற்பாடுகள்**

ஆங்கிலம் - சிங்களம் கலைச் சொற்றொகுதிப் பிரிவு

i. பின்வரும் 08 ஆங்கிலம் - சிங்களம் கலைச்சொல் தொகுதிகளின் தொகுப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன.
   மொழியியல், சட்டம், தத்துவவியல், சமூகவியல், நூலகம் மற்றும் தகவலியல், அரசறிவியல், கலை வரலாறு, சுகாதாரம் உடலியல் மற்றும் தாதியியற் சேவை.

ii. ஆலோசகர்களுடன் அவ்வவ் விடயங்களுக்குரிய பதங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி சிங்கள சொற்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் 1000 தொல்பொருளியல் கலைச் சொற்றொகுதிப் பிரதிகள் 2012ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டதோடு 160 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டன.

ஆங்கிலம் - தமிழ் கலைச்சொல் தொகுப்புப் பிரிவு

i. ஆங்கிலம் - தமிழ் கலைச்சொல் தொகுப்புப் பிரிவின் கீழ் பின்வரும் 09 சொற்றொகுதிகள் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன.
   - கல்வி (A – K வரையான சொற்கள்)
   - இலக்கியம் (A – Q வரையான சொற்கள்)
   - வரலாறும் தொல்பொருளியலும் (A – H வரையான சொற்கள்)
   - பௌதீகவியல் (A – P வரையான சொற்கள்)
   - கணிதம் (A – R வரையான சொற்கள்)
   - தொடர்பாடல் (A – Z வரையான சொற்கள்)
   - மொழியியல் (A – Z வரையான சொற்கள்)

ii. கீழ்வரும் தாவரவியல், விவசாயம், பொறியியல் (இரசாயணவியல் மற்றம் இயந்திரவியல்)கலைச் சொற்றொகுதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

## VIII. நூலகம்

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் நூலகம் உயர்தரத்திலான ஓர் நூலகமாகும். தேசிய நூலக ஆவணப்படுத்தல் சேவைகள் சபையினால் 2002.05.03 ஆம் திகதி இந்நூலகம் உயர்தரத்திற்கு உயர்த்தப்பட்டது.

**2012 ஆம் அண்டின் செயற்பாடுகள்:**

i. நூலகத்திலுள்ள அனைத்துப் புத்தகங்களையும் கணக்கெடுத்தல்.
ii. விளம்பரப் பலகையைப் பேணுதல்.
iii. விசேட ஆக்கங்களின் தொகுப்புகளைப் பேணுதல்.
iv. பத்திரிகைகளில் பிரசுரமாகும் மொழி ஆக்கங்களின் தொகுப்புக்களை பேணுதல்.
v. திணைக்களம் தொடர்பான பத்திரிகை ஆக்கங்களைத் திரட்டுதல்.
vi. நூலக சுட்டெண்ணை நிரற்படுத்துவதற்கு ஆரம்பித்தல்.

# 10. திணைக்களத்தின் முன்னேற்ற அறிக்கை

## 10.1 செயற்திட்டம் - 2012

| தொடர் இல. | செயற்பாடு | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | காலம் | மதிப்பிடப்படும் செலவு | | | | பொறுப்புடைமை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச நிதி | | வெளிநாட்டு நிதி | மொத்தம் | |
| | | | | திணைக்களம் | அமைச்சின் வாக்கு | | | |
| 01. குறிக்கோள் : மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொள்வதற்கு உதவும் வசதிகளை வழங்கல்<br>(I). புத்தகங்களை மற்றும் மொழிப்பயிற்சிப் புத்தகங்களை ஆக்குதலும் அச்சிடலும் | | | | | | | | |
| I. | எழுத்துத் தமிழ், பேச்சுத்தமிழ் புத்தகங்களை அச்சிடுதல். | பிரதிகள் 5000x2 | ஏப்ரல் | 1.2 மில்லியன் | - | - | 1.2 மில்லியன் | ஆணையாளர் |
| II. | பேச்சு சிங்களம் புத்தகத்தை அச்சிடுதல் (மட்டம் III சிங்கள தேர்ச்சி) | பிரதிகள் 5000 | மார்ச் | 0.8 மில்லியன் | - | - | 0.8 மில்லியன் | ஆணையாளர் |
| III. | பேச்சுத் தமிழ் புத்தகத்தை திருத்துதலும் அச்சிடுதலும் | பிரதிகள் 5000 | மார்ச் - ஆகஸ்ட் | - | 2 மில்லியன் | - | 2 மில்லியன் | ஆணையாளர் |
| IV. | தமிழ்மொழி தேர்ச்சி மட்டம் I ற்கான 03 புதிய புத்தகங்களையும் சிங்கள மொழித்தேர்ச்சி மட்டம் I/II ற்கான புத்தகங்களையும் எழுதி அவற்றை அச்சிடல். | பிரதிகள் 5000x3 | மார்ச் - திசெம்பர் | - | 4 மில்லியன் | | 4 மில்லியன் | ஆணையாளர் |

| தொடர் இல. | செயற்பாடு | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | காலம் | மதிப்பிடப்படும் செலவு | | | | பொறுப்புடைமை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச நிதி | | வெளிநாட்டு நிதி | மொத்தம் | |
| | | | | திணைக்களம் | அமைச்சின் வாக்கு | | | |
| 01. குறிக்கோள் : மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொள்வதற்கு உதவும் வசதிகளை வழங்கல் (II). அகரமுதலிகளைத் தொகுத்தல் | | | | | | | | |
| I. | தொல்பொருளியல், விவசாயம், இரசாயனியல், முகாமைத்துவம், நுண்ணுயிரியல், தாவரவியல் அகரமுதலிகளை அச்சிடுதல். | பிரதிகள் 3000 06 பாடங்கள் | பெப்ரவரி | 1.5 மில்லியன் | - | - | 1.5 மில்லியன் | ஆணையாளர் |
| II. | சிங்கள, ஆங்கில கலைச் சொல் அகரமுதலிகளை இறுதியாகத் தொகுத்தல் (மொழியியல், சட்டம், மெய்யியல், சமூக விஞ்ஞானம், நூலக மற்றும் தகவல் விஞ்ஞானம், அரசியல் விஞ்ஞானம், கலை, வரலாறு, சுகாதாரம், பௌதீகமும் பராமரிப்பும்). | 08 | திசெம்பர் | | - | - | - | ஆணையாளர் |
| III. | ஆங்கில – தமிழ் கலைச்சொல் அகரமுதலிகளை இறுதிப்படுத்தி தொகுத்தல். | 10 பாடங்கள் | ஜனவரி – திசெம்பர் | | - | - | - | ஆணையாளர் |
| IV. | மும்மொழி அகரமுதலிகளைத் தொகுத்து அச்சிட்டு வெளியிடல் (III தொகுதி). | | ஜனவரி – திசெம்பர் | | - | - | - | ஆணையாளர் |
| V. | புதிய முயற்சியாக இணையத்தளத்தில் மின்-அகராதிகளை வெளியிடல். | | ஜனவரி | | - | - | - | ஆணையாளர் |
| VI. | அரச உத்தியோகத்தர்களுக்கு அரசமொழிக் கொள்கை பற்றிய விளிப்புணர்வை ஏற்படுத்தல். | | ஜனவரி | | - | - | - | ஆணையாளர் |

| தொடர்இல. | செயற்பாடு | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | காலம் | மதிப்பிடப்படும் செலவு | | | | பொறுப்புடைமை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச நிதி | | வெளிநாட்டு நிதி | மொத்தம் | |
| | | | | திணைக்களம் | அமைச்சின் வாக்கு | | | |
| 02. குறிக்கோள் : மொழித் தேர்ச்சி பரீட்சையை நடாத்துதல் | | | | | | | | |
| I. | ஒரு வருடத்தில் இருமுறை அரசகரும மொழிகள் தேர்ச்சிப் பரீட்சை மட்டம் I, II, III, நடாத்தப்படுகின்றன. | பரீட்ச்சார்த்திகள் 30000x2 | மார்ச், ஜூலை | 5.5 மில்லியன் | 9.5 மில்லியன் | - | 15 மில்லியன் | ஆணையாளர் |
| II. | எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு வாய் மொழி மூலம் பரீட்சை நடாத்துதல். | 15000x2 | மே – செப்தெம்பர் | - | 2.5 மில்லியன் | - | 2.5 மில்லியன் | ஆணையாளர் |
| III. | அரசகரும மொழிகள் தேர்ச்சிப் பரீட்சையில்சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கள். | பரீட்சையில் சித்தியடைந்த எல்லோருக்கும் | - | - | 0.2 மில்லியன் | - | 0.2 மில்லியன் | ஆணையாளர் |
| IV. | வேறு நிறுவனங்களில் பரீட்சைகளை நடாத்துதல்.<br>1. தேசிய படைப்பயிற்சி மாணவ இளைஞர் படை - றன்டெபே, அடிப்படை ஆங்கிலம்.<br>2. கொத்மலை தொழிநுட்ப பயிற்சி நிறுவனம் - உயர்தர தமிழ்.<br>3. உள்நாட்டு மருத்துவ அமைச்சு- ஹோமியோபதி - தடைதாண்டல் பரீட்சை.<br>4. மீன்பிடி, துறைமுக கூட்டுறவு - தமிழ் மட்டம்III- விஷேட பரீட்சை.<br>5. மாவட்ட விவசாய கைத்தொழில் வர்த்தக சபை - அநுராதபுரம் - மட்டம் III.<br>6. அரசகரும மொழிகள் ஆணைக்குழு - தடைதாண்டல் பரீட்சை.<br>7. மொழிபெயர்ப்பு உதவியாளர் - தடைதாண்டல் பரீட்சை. | | மார்ச் - ஜூலை | - | | - | | |

| தொடர் இல. | செயற்பாடு | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | காலம் | மதிப்பிடப்படும் செலவு | | | | பொறுப்புடைமை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச நிதி | | வெளிநாட்டு நிதி | மொத்தம் | |
| | | | | திணைக்களம் | அமைச்சின் வாக்கு | | | |
| 03. குறிக்கோள் : அரச மற்றும் அரச சார்பற்ற தரப்பினர்களுக்கு மொழிபெயர்ப்பு சேவைகளை வழங்குதல். | | | | | | | | |
| I. | மொழிபெயர்ப்பாளர் தரவுத் தளத்தை இற்றை நாள்படுத்துதல். | | ஜனவரி - பெப்ரவரி | 0.3 மில்லியன் | - | - | 0.3 மில்லியன் | ஆணையாளர் |
| II. | உரைபெயர்ப்பாளர் தரவுத் தளத்தை நிறுவுதல். | 250 | ஜனவரி - மார்ச் | | - | - | | ஆணையாளர் |
| III. | மொழி பெயர்ப்பு உதவியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி. | 94 | ஜனவரி - திசெம்பர் | | - | - | | ஆணையாளர் |
| IV. | புதிய தொழிநுட்பத்தை பயன்படுத்தி மொழிபெயர்ப்புத் துறையை திறனுடையதாக்கல்(இணையத்தளமூடாக மொழிபெயர்ப்பைச் செய்தல்). | | ஜூன் – திசெம்பர் | - | - | NLP | | ஆணையாளர் |
| V. | தெரிவு செய்யப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களுக்கு தகவல் தொழிநுட்பத் துறையில் பயிற்சி வழங்கல். | | ஜூன் – திசெம்பர் | - | - | NLP | | ஆணையாளர் |
| VI. | மொழிபெயர்ப்பின் எதிர்கால அவசியத்தன்மை பற்றிய மதிப்பீடு. | | ஜனவரி - திசெம்பர் | - | - | NLP | | ஆணையாளர் |
| VII. | மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்கான பயிற்சிப் பட்டறை. | | | - | - | NLP | | ஆணையாளர் |
| VIII. | மொழிபெயர்ப்பின் திறனை விருத்தி செய்வதற்கான இணைந்த சபைகள் கூட்டம். | 12 மாதந்த கூட்டங்கள் | | - | - | NLP | | ஆணையாளர் |
| IX. | வெளிநாட்டு கல்விப் பயணம். | | | - | - | NLP | | ஆணையாளர் |
| X. | மொழிபெயர்ப்புப் பணியகத்தை நிறுவுதல். | | | - | - | NLP | | ஆணையாளர் |
| XI. | உரைபெயர்ப்பாளர் தொடர்பான சேவையையும் அழைப்பு நிலையத்தையும் நிறுவுதல். | | | - | - | NLP | | ஆணையாளர் |

| தொடர் இல. | செயற்பாடு | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | காலம் | மதிப்பிடப்படும் செலவு | | | | பொறுப்புடைமை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச நிதி | | வெளிநாட்டு நிதி | மொத்தம் | |
| | | | | திணைக் களம் | அமைச்சின் வாக்கு | | | |
| 04. குறிக்கோள் : தேசிய மற்றும் சர்வதேச மொழிகளின் திறனை மேம்படுத்தல். | | | | | | | | |
| I. | சிங்கள, தமிழ், ஆங்கில மற்றும் பிறமொழிப் பயிற்சிநெறிகளை நடாத்துதல். | 1000 மாணவர்கள் | ஜனவரி-ஜூலை<br>ஜூலை-திசெம்பர் | 1.8 மில்லியன் | - | - | 1.8 மில்லியன் | ஆணையாளர் |
| II. | பாடநெறிகளது தரத்தை உயர்த்துவதற்கு இணையத்தள வசதிகளை வழங்குதல். | | | | - | - | | ஆணையாளர் |
| III. | தொலை கல்வி முறை மூலம் இருமொழி அறிவை விருத்தி செய்தல்.<br>i. உயர்தர தமிழ்பாடநெறிக்கான கல்வி நிகழ்ச்சியை இலங்கை ஒலிபரப்பு கூடடுத்தாபனத்தின் ஊடாக ஒலிபரப்புபுச் செய்தல்.<br>ii. அரசகரும மொழித்தேர்ச்சி மட்டம் 1 ற்கான இறுவட்டு ஒன்றை உருவாக்குதல்.<br>iii. மின்-கற்றல் முறையை நிறுவுதல். | 10000 | ஜனவரி - மார்ச்<br>ஜனவரி - ஏப்ரல்<br>ஜனவரி - ஆகஸ்ட் | | - | - | | ஆணையாளர் |
| IV. | (சிங்களம், தமிழ்) மொழிகள் பற்றிய கருத்தரங்குகள் 4 ஐ நடாத்துதல். | 600 பயனாளிகள் | பெப்ரவரி/மே/ ஆகஸட்/ நவம்பர் | | - | - | | ஆணையாளர் |

| தொடர் இல. | செயற்பாடு | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | காலம் | மதிப்பிடப்படும் செலவு | | | | பொறுப்புடைமை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச நிதி | | வெளிநாட்டு நிதி | மொத்தம் | |
| | | | | திணைக்களம் | அமைச்சின் வாக்கு | | | |
| 05. குறிக்கோள் : தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம். | | | | | | | | |
| I. | தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம். | | ஜனவரி – பெப்ரவரி | 05 மில்லியன | | | | ஆணையாளர் |

## 10.2 இவ் வருடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டுகள் தொடர்பான விபரங்கள் - 2012

| குறியீட்டு இலக்கம் | விவரணம் | மொத்த நிரம்பல் | மொத்த செலவீனம் | மீதி | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 236-1-1-0-1001 | சம்பளங்கள் மற்றும் கூலிகளும் | 36605000.00 | 28042261.92 | 8562738.08 | 76.61 |
| 236-1-1-0-1002 | மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள் | 500000.00 | 283577.86 | 216422.14 | 56.72 |
| 236-1-1-0-1003 | ஏணைய பிடிகள் | 13895000.00 | 13890362.02 | 4637.98 | 99.97 |
| | ஆளுக்குரிய வேதனங்கள் | 51000000.00 | 42216201.80 | 8783798.20 | 82.78 |
| 236-1-1-0-1101 | பிரயாணச்செலவுகள்-உள்நாட்டு | 196000.00 | 195548.42 | 451.58 | 99.77 |
| 236-1-1-0-1102 | பிரயாணச்செலவுகள்-வெளிநாடு | 403000.00 | 399560.00 | 3440.00 | 99.15 |
| 236-1-1-0-1201 | எழுதுகருவிகள், அலுவலக தேவைகள் | 980000.00 | 979976.33 | 23.67 | 100.00 |
| 236-1-1-0-1202 | எரிபொருள்கள் | 490000.00 | 347811.00 | 142189.00 | 70.98 |
| 236-1-1-0-1203 | உணவுகள் மற்றும் சீருடைகள் | 49000.00 | 48978.20 | 21.80 | 99.96 |
| 236-1-1-0-1301 | வாகனங்கள் பராமரிப்பு | 212000.00 | 201763.00 | 10237.00 | 95.17 |
| 236-1-1-0-1302 | பொறித் தொகுதி, இயந்திர உபகரணப் பராமரிப்பு | 147000.00 | 70683.47 | 76316.53 | 48.08 |
| 236-1-1-0-1303 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் பராமரிப்பு | 2470000.00 | 2147256.03 | 322743.97 | 86.93 |
